இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நான் வழங்கும் இறைவார்த்தை ஊழிஊழியாக, தலைமுறை தலைமுறையாக மறைந்திருந்த இறைத்திட்டத்தைப் பற்றியது. அத்திட்டம் இப்பொழுது இறைமக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. மக்களினங்களிடையே அது அளவற்ற மாட்சியுடன் செயல்படுகிறது என்பதைத் தம் மக்களுக்குத் தெரிவிக்க கடவுள் திருவுளம் கொண்டார். உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்துவைப் பற்றியதே அத்திட்டம். மாட்சி பெறுவோம் என்னும் எதிர்நோக்கை அவரே அளிக்கிறார். கிறிஸ்துவைப் பற்றியே நாங்கள் அறிவித்து வருகிறோம். (கொலோ 1:25-28)

# இலங்கையில் அமைதி நிலவ திருத்தந்தை விண்ணப்பம்!

**வத்திக்கான்:** ஜூலை 10, கடந்த ஞாயிறு நண்பகலில் வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு மூவேளை செப உரையாற்றியபின்னர், இலங்கை, மற்றும், உக்ரைனில் அமைதி நிலவவேண்டும் என்று கேட்டுக் கொண்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இலங்கையில் நிலவும் அரசியல், மற்றும், பொருளாதார உறுதியற்றதன்மையின் எதிர்விளைவுகளால் தொடர்ந்து துன்புறும் அம்மக்களோடு தனது ஒருமைப்பாட்டுணர் வைத் தெரிவிப்பதாக மேலும் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இலங்கை ஆயர்களோடு தானும் இணைந்து, அந்நாட்டில் அமைதி நிலவவேண்டும் என மீண்டும் விண்ணப்பிக்கிறேன் என்றும், அந்நாட்டுத் தலைவர்கள், ஏழைகளின் அழுகுரல் மற்றும், மக்களின் தேவைகளைப் புறக்கணிக்கவேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன் என்றும் திருத்தந்தை கூறியுள் ளார்.

## அமைதி நிலவ ஐ.நா.

மேலும், இலங்கையில் அமைதி காக்குமாறு, அதிகாரிகளையும், போராட்டதாரர்களை யும் கேட்டுக்கொண்டுள்ள ஐ.நா.வின் மனித உரிமைகள் அவையின் உயர் இயக்குனர் அலுவலகம், அந்நாட்டில் மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிக ளும் வன்முறையைத் தவிர்ப்பதற்கு உறுதிசெய்வதாய் இருக்கவேண்டும் என வலியுறுத்திக் கூறியுள்ளது.



*இலங்கை அரசுத் தலைவர் மாளிகையுனுள் (AFP or licensors)*

இலங்கையில் இடம்பெறும் கடும் பொருளா தார நெருக்கடி காரணமாக, அரசுத் தலைவர் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, அந்நாட்டில் நூறு நாள்களுக்கு மேலாக நடைபெற்று வரும் மக்கள் கொந்தளிப்பின் உச்சகட்டமாக, ஜூலை 09 கடந்த சனிக்கிழமையன்று அரசுத்தலைவர் மாளிகையில் போராட்டதாரர்கள் நுழைந்து அவ்விடத்தை ஆக்ரமித்துள்ளனர். இதை யடுத்து காவல்துறை ஊரடங்கு சட்டத்தை அறிவித்துள்ளது. அந்நாட்டில் இடம்பெறும் வன்முறையில் இரு காவல்துறையினர் உட்பட குறைந்தது 21 பேர் காயமுற்றுள்ளனர் என்று செய்திகள் கூறுகின்றன.

மேலும், ஜப்பான் நாட்டின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே (Shinzo Abe) அவர்கள், படுகொலைசெய்யப்பட்டுள்ளது குறித்து, தனது ஆழ்ந்த வருத்தத்தையும், அவரது இறப்பால் வருந்தும் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும், நாட்டினருக்கு தன்



இதயம்நிறைந்த அனுதாபங்களையும் தெரிவித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

ஜப்பானில் இந்த அறிவற்ற செயல் இடம்பெற்றுள்ள இவ்வேளையில், அமைதி, மற்றும், வன்முறையின்மை ஆகியவற்றுக்கு, வரலாற்று ரீதியாக தன்னை அர்ப் பணித்துள்ள ஜப்பானிய சமுதாயம், அவற்றில் உறுதிப்படுத்தப்பட இறை வேண்டல் செய்வதாகவும், திருத்தந்தை, தன் இரங்கலில் மேலும் கூறியுள்ளார்.

*மேரி தெரேசா: வத்திக்கான்*

# மலேசிய திருஅவையின் இளைஞர் பணிக்குழுக்கள் மிரியில் ஒன்றுகூடினர்

**மிரி:** மிரி மறைமாவட்டத்தின் இளைஞர் பேரவை ஏற்பாட்டில், மலேசிய கத்தோலிக்க இளைஞர் பணியாளர்கள் குழு (MCYMC) கடந்த ஜூன் 27 முதல் ஜூலை 2 வரை Lutong, Mater Dei தேவாலயத்தில் ஒன்றுகூடலில். ஏறக் குறைய இரண்டு வருடங்களுக்கும் மேலான இயங்கலை சந்திப்புகளுக்குப் பிறகு நேர்முகமாக சந்திக்க முடிந்தது மகிழ்ச்சியான சூழலாக அமைந்தது என அனைத்து பங்கேற்பாளர்களும் கருத்து ரைத்தனர். மலேசியாவின் இளைஞர் மற்றும் வட்டார ரீதியிலான ஆயர் ஆணையத்தின் பொறுப்பாளர், கூச்சிங் பேராயர் சைமன் போ அவர்கள் இளைஞர் பணிகுழுவினர், எல்லா இடங்களிலும் உள்ள இளைஞர்களுக்கு ஆற்றிவரும் சேவைகளுக்கும் அவர்க ளுக்கு உறுதிணூயாக பணியைத் தொடர்வதற்காக தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

MCYMC உறுப்பினர்கள் கடந்த ஜூன் 25 அன்று மிரி மறைமாவட்டத்தின் பேராயர் ரிச்சர்ட் இங் அவர்களின் தொடக்க திருப்பலியில் வரவேற்கப் பட்டனர். அதைத் தொடர்ந்து தோழமை நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்படிருந்தது. இந்த ஆண்டு கூட்டம் 2025 -ல் நடைபெறவுள்ள மலேசிய இளைஞர்கள் பேரவையை நோக்கிய பயணத்தை முதன்மையாக மையப்படுத்தப்பட்டி ருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பேரவை கூட்டத்தைத் தவிர்த்து, அருட்தந்தை ஹென்றி சாலே மற்றும் MiDYC இளைஞர் பணிக்குழு மறை மாவட்டத்திலும் அதைச் சுற்றியுள்ள பல்வேறு சமூக நிகழ்வுகளிலும் குழுவினர் பங்கேற்க ஏற்பாடு செய்தனர்.

இந்த வருடாந்திர MCYMC கூட்ட மானது, இளைஞர் பணிக்குழுவினர் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியை ஒன்றாக அனுபவிக்க ஒரு வழியாக்க விளங்குகிறது. இந்த ஆண்டு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, அருட்சகோதரி சாந்தி மரியதாஸ், "இளைஞர் மேய்ப்புப்பணி பணியாளர்களுக்கான சுய பாதுகாப்பு" என்ற தலைப்பில் ஒரு அமர்வை வழிநடத்தினார். அத்தோடு, மிரி மறைமாவட்டத்தின் அருட்தந்தை



எஸ்.கே.செல்வன் அவர்கள், பணியில் தங்கள் வாழ்க்கையைப் பிரதிபலிக்கவும் அதனை மதிப்பீடு செய்யவும் பணியாளர் களுக்கு பயிற்சியில் வழிநடத்தினார் மலேசியாவில் நடக்கும் பல்வேறு நிகழ்வுகளில் இளைஞர்கள் நிகழ்வுகளில் பங்கேற்க விரும்பும் இளைஞர்கள் தந்தம் மாமறை அல்லது மறைமாவட் டத்தில் உள்ள இளைஞர் அலுவலகங்கள், ஆணையங்கள் திருத்தூதுப்பணியகங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு அழைக்கப் படுகிறார்கள்.

# மின்யாக் தோட்டத்தில் புனித அந்தோணியார் திருவிழா கொண்டாடப்பட்டது

**பெஸ்தாரி ஜெயா:** இங்குள்ள மின்யாக் தோட்டத்தில் அமைந்துள்ள பழமை வாய்ந்த புனித அந்தோணியார் சிற்றாலயத்தில் ஈராண்டு இடைவெளிக்குப் பின் ஆண்டு திருவிழா கொண்டாடப்பட்டது. ஜூலை 9 அன்று இரவு 7.30 மணிக்கு கொடியேற்றமும் நவநாளும் மறுநாள் இரவு 7.30க்கு நவநாள் செபவழிபாடும் நடைபெற்றது.



தொடர்ந்து 11-ம் திகதி, திங்கட்கிழமை (பொதுவிடுமுறை) காலை 11 மணிக்கு திருவிழா திருப்பலியைப் பங்குத்தந்தை ஜேம்ஸ் கேபிரியேல் அவர்கள் கொண்டாடினார். தற்காலத்தில் இத்தோட்டத்தில் கத்தோலிக்கக் குடும்பங்கள் இல்லாத சூழலில் முன்பு இங்கு வசித்த கத்தோலிக்க மக்கள் பலர் குடும்பம் குடும்பமாக திருப்பலிக்கு வந்திருந்தனர்.

திருவழிபாட்டு குழுவினர் சிறப்பாக திருப்பலிக்கான தயாரிப்புக்களைக் கவனித்திருந்தனர். அலங்கரிப்பு, மதிய உணவு போன்ற ஏற்பாடுகளும் சிறப்பாகவே இருந்தது. பங்குத்தந்தை பொறுப்பாளர்கள் அனைவருக்கும் நன்றியும் பாரட்டும் தெரிவித்தார். மேலும், அவரது மறையுரையில், இச்சிற்றாலயத்திலிருந்து உருவாக்கப்பட்ட பலர் மாமறைமாவட்ட அளவில் மறைக்கல்வி, விவிலியம் மற்றும் சமூகச் சேவைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்று பெருமிதம் கொண்டார்.



நிறைவாக, கொடி இறக்கப்பட்டதோடு மூன்று நாள் விழாக் கொண்டாட்டம் ஒரு முடிவை எய்தியது.

*ஆர்.கே.*

# 'புனித பவுல் அடிகளின் திருமுகங்கள்' திருக்குடும்பப் பங்கின் ஏற்பாட்டில் சொற்பொழிவு நடைபெற்றது

காஜாங்: கடந்த 12 ஜூலை அன்று, இங்குள்ள திருக்குடும்பப் பங்கின் விவிலியப் பணிக்குழு அதன் மாதாந்தர விவிலிய சொற்பொழிவை நடத்தியது. புனித பவுலின் ஆன்மீகம் எனும் தொடரில் 'புனித பவுலின் திருமுகங்கள்' எனும் தலைப்பில் சகோ. ஆர்.கே. சாமி அவர்கள் முதலாவது பாகத்தை சொற்பொழிவாக வழிநடத்தினார்.

திருமுகங்களின் நோக்கம், அவற்றின் பிரிவுகள், வளர்ச்சியின் படிகள், அமைப்பு முறை போன்றவற்றில் விளக்கமளித்தார். தொடர்ந்து கால வரிசையின் அடிப்படையில் முதலாம் மற்றும் இரண்டாம் தெசலோனிக்கர் திருமுகங்களை விவரித்தார். முதல் தெசலோனிக்கர் கிறிஸ்துவின் 2-ம் வருகை குறித்த சந்தேகத்திற்கு பதில் அளித்தலும், அவரது வருகைக்கு எப்போதும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துவதையும் தெளிவுப்படுத்தினார். தொடர்ந்து, இரண்டாவது தெசலோனக்கர் முதல் திருமுகத்தின் இறையியல் தொடர்ச்சியாக உள்ளது என்பதையும் விளக்கினார்.

இயங்கலை வாயிலாக நடைபெற்ற இப்பயிற்சியில் 50க்கு மேற்பட்டோர் நேரடியாகவும், யூ டியூப் செனல் (வலைத்தளம்) வழியாகவும் கலந்துகொண்டனர்.

அடுத்த மாதம் 'புனித பவுலின் திருமுகங்கள்' பாகம் இரண்டு இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

-மதலின், காஜாங்.

# அரசியலமைப்பில் கருக்கலைப்பு இணைப்புக்கு ஆயர்கள் எதிர்ப்பு!

அமெரிக்க ஐக்கிய நாட்டு கருக்கலைப்பு விவாதத்தில் ஐரோப்பிய பாராளுமன்றம் இணையக் கூடாது என்று, EU எனப்படும் ஐரோப்பிய ஒன்றியத்தைக் கேட்டுக் கொண்டுள்ள அப்பகுதியின் ஆயர்கள், இவ்விவகாரம் அப்பாராளுமன்றத்தின் சக்திக்கு அப்பாற்பட்டது என்று தெரிவித்துள்ளனர்.

EU நாடுகள், ஐரோப்பியர்களுக்குள் ஒற்றுமையை அதிகமாக வளர்ப்பதற்காக, பணியாற்றுமாறு வலியுறுத்திக் கூறியுள்ள அந்நாடுகளின் ஆயர்கள், ஜூலை 7, கடந்த வியாழனன்று ஐரோப்பிய பாராளுமன்றத்தில் கருக்கலைப்பு குறித்து கொணரப்பட்ட புதிய தீர்மானம் குறித்த கவலையையும் வெளியிட்டுள்ளனர்.




*கருக்கலைப்புக்கு எதிர்ப்பு (ANSA)*

ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளில் கருக்கலைப்பை இணைத்திருப்பது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ள ஆயர்கள், இது நாடுகளின் சீர்திருத்தத்திற்கு ஆபத்தாக அமையும் எனவும் கூறியுள்ளனர்.

# ஆயர்களைத் தேர்ந்தெடுக்கும் ஆலோசனைக் குழுவில் இரண்டு பெண்களும் இடம் பெறவுள்ளனர்

வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றமாக, முதன்முறையாக, ஆயர்களைத் தேர்ந்தெடுக்கும் ஆலோசனைக் குழுவில் இரண்டு பெண்களையும் சேர்த்துக்கொள்வதாக திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்துள்ளார். கடந்த ஜூலை 2 அன்று தனது இல்லத்தில் ராய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், சமீபத்திய சீர்திருத்தத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளபடி, நிர்வாகத்தில் அதிக உயர் பதவிகளை ஏற்க, சாதாரண மக்கள் உட்பட, "[பெண்களுக்கு] ஒரு வாய்ப்பை வழங்குவதற்குத் திறந்திருப்பதாக" திருத்தந்தை கூறினார்.



*வத்திக்கான் நகர ஆளுநர் பதவியில் 2-வது இடத்தை வகிக்கும் சகோதரி ரஃபேல்லா பெட்ரினி*

## உலக மக்கள் தொகை - வத்திக்கான் அறிக்கை

**உலக மக்கள் தொகையில் 31.1% கிறிஸ்தவர், 24.9% முஸ்லிம்கள். மதம் என்று பார்க்கும்போது, மூன்றாவது இடத்தில் இந்து மதம் 15.16 விழுக்காட்டுடன் நிற்கிறது. உலகில் மதம் சாராதவர், மற்றும் மத நம்பிக்கையற்றவர்களின் எண்ணிக்கை 15.58 விழுக்காடு.**

# நல்ல பங்கைத் தேர்ந்துகொள்வோம் !

கடந்த வாரம் நல்லச் சமாரித்தன் கதையில் ஒரு சீடர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கண்டோம். இவ்வாரம் ஒரு சீடர் எவ்வாறு செவிசாய்க்க வேண்டும் என்பதை இயேசு கற்பிக்கிறார். கடந்த வாரம் பெயர் தெரியாத சமாரியர், வழிபோக்கர்க்கு உதவி செய்வதை விளக்கினார். அந்த கதையின் மையக் கருத்து மனிதநேயம்.

இவ்வார நிகழ்வில் குறிப்பிடப்படுவது ஓர் உவமையல்ல. ஓர் உண்மை நிகழ்வு. இவ்விரு பெண்களும் சரித்திரப் பெண்கள், அவர்களுக்கு பெயர் உண்டு, ஊர் உண்டு, முகவரி உண்டு. அதாவது உண்மையாக வாழ்ந்தவர்கள். முதல் வாசகத்தில் இறைவார்த்தையின் வல்லமையை கடவுள் வெளிப்படுத்துகின்றார். அபிரகாமும் கடவுளின் வார்த்தைக்குச் செவிசாய்த்தோடு அதனை நம்புகின்றார்.

நற்செய்தியில் தங்கள் வீட்டிற்கு வரும் இயேசுவை மார்த்தாவும் மரியாவும் வரவேற்கின்றனர். வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தினர் சொல்வதை காது கொடுத்து கேட்பதும் ஓர் உபசரிப்புதான். மேலும், இயேசு ஒரு போதகர் என்பது இவர்களுக்குத் தெரியும். மார்த்தா பற்பல பணிகள் புரிவதில் பரபரப்பாக இருக்கிறார். மரியாவோ இயேசுவின் காலடியில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். "இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் அதிகம் பேறுபெற்றோர் (லூக்.11:27-28) என இயேசு சொல்வதை வைத்துப் பார்த்தால், மரியா நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார் என்பது வெள்ளிடை மலை. இதை இயேசுவும் அமோதிக்கிறார், பாராட்டுகிறார்.

இயேசுவை வரவேற்ற மார்த்தா அவருக்கு விருந்து ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கிளம்பி விடுகின்றார். அதுமட்டுமல்லாமல், தனக்கு உதவிசெய்ய வரவில்லை என்று தன் சகோதரி மரியாவைக் குறைபட்டுக் கொள்கின்றார்.

வீட்டிற்கு வந்த விருந்தினரை உபசரிப்பதும் விருந்து படைப்பதும் சிறந்த பண்பு என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இங்கு இயேசு எதை விரும்புகிறார் என்பதே முக்கியம். அவரது விருப்பம் வார்த்தையான அவரை முதலில் அண்டிக் கொள்வதாகும். ஆகையால், நாம் மார்த்தவைப் போன்று இயேசுவை விட்டுவிலகி, எதை எதையோ செய்து கொண்டிருக்கவும் அவரைத் திருப்திப்படுத்தவும் முயல்கிறோம்.

"மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல. மாறாக, கடவுள் வாய்ச்சொல் ஒவ்வொன்றால் வாழ்வர்' (மத் 4:4) என்று இறைவார்த்தையின் அர்த்தத்தை மரியா உணர்ந்திருக்க வேண்டும். அதனால்தான் அவர் இயேசுவின் காலடியில் அமர்ந்து, அவருடைய வார்த்தையைக் கேட்கின்றார்.

பல நேரங்களில் நாம் மார்த்தாவைப் போன்றுதான் எதை எதையோ நமது வாழ்வுக்கு தேவை என்று நினைத்துக் கொண்டு கிறிஸ்துவை விட்டும், அவருடைய சமூகங்களை விட்டும் எங்கோ சென்றுவிடுகிறோம். 'அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுவோம். அப்போது நமக்குத் தேவையானது நமக்குச் சேர்த்து கொடுக்கப்படும்' (மத் 6:33).

கிறிஸ்தவம் என்பது கடவுளைத் திருப்திபடுத்துவது அல்ல, மாறாக, அவர் விரும்புவதை நிறைவேற்றுவதில் நிறைவு பெறுகிறது.

*அந்தோணி இன்னாசி, ஸ்ரீ கெம்பாஙான், சிலாங்கூர்*

**ஆண்டின் பொதுக்காலம் 16-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | தொ.நூ 18: 1-10 |
| தி. பாடல்: | 15: 2. 3-4. 5 |
| 2ம் வாசகம்: | கொலோ 1: 24-28 |
| நற்செய்தி: | லூக் 10:38-42 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 3
வாரநாள் முதல் வாசகம் —ஆண்டு 2